உ

சிவமயம்.

# வேளாளன்

## தூத்துக்குடி.

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.


வயது 1 } 1105-ளு சுக்ல-ஸு ஆவணி 4-உ { மாதம் 5


"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

### சமூக கனவான்களுக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்.

"கனவான்களே! நம் சமுகத்தில் அளவிலா ஆர்வங்கொண்டு நமது வேளாளனை ஆரம்பித்து என் வியாபாரத்தையுங் கவனியாமல் கைப்பொருளைச் செலவு செய்து பல கஷ்டங்களினிடையே ஐந்து மாதங்களாக நடத்திவருகின்றேன். தங்களுடைய உத்திரவின்பேரிலும் தங்களின் உற்றார் உறவினர்களின் உதவியால் தங்கள் உத்திரவன்னியிலும் வேளாளனை ஆதரிப்பீர்களென்ற முழு நம்பிக்கையின்பேரிலும் அனுப்பினேன். தாங்கள் அனைவர்களும் அன்புடன் பெற்றுவருகின்றீர்கள். ஆனால் தங்கள் சந்தாத் தொகைகளைப் பெரும் பகுதியினர் இன்னும் அனுப்பியுதவவில்லை." அனுப்பியுதவாத அன்பர்களுக்கு நாலாவது இதழில் அறிவித்தபடி ஐந்தாவது இதழ் முதல் வி. பி. யில் அனுப்பி வருகின்றேன். கனவான்களெல்லாரும் வி. பி. யைப் பெற்றுச் சந்தாவைச் செலுத்தி வேளாளனை ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றேன் -வி. பி. யில் சந்தாவைச் செலுத்த மறுத்துவிடுவீர்களாகில் எமக்கு மிகுந்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுமென்பதைத் தாழ்மையாய்த் தெரிவிக்கின்றேன். —பத்திராதிபன்.

## ஆஸ்திக மஹாநாடும் ஆதீன மஹா சந்நிதானமும்

சமீபத்தில், திருவாவடுதுறையாதீன மஹா சந்நிதான குருமூர்த்திகள் ஆதரவில் ஆஸ்திக மஹாநாடு பாவநாசத்தில் நடைபெறப்போவதாய்ப் பத்திரிகைகள் மூலம் படித்தோம். பின்னர் வேதாரண்ணியத்தில் நடைபெறும் தமிழ் மாகாண மஹா நாட்டிற்கு முன் தினத்தில் ஆஸ்திக மஹா நாடு நடைபெறுமென்று தெரிகின்றேம். பாவநாசத்தில் நடைபெற விருந்த ஆஸ்திக மஹாநாடே வேதாரண்ணியத்தில் நடைபெறுகின்றதென நினைக்கின்றேம். கோவில் இல்லை, குளம் இல்லை; பாவம் இல்லை, புண்ணியமில்லை, புராணமில்லை, வேதம் இல்லை, ஆகமம் இல்லை என்றும் முன்னேர் கொள்கை மூடக கொள்கை யென்றும் பெரியார் சிறியார் என்ற பேதமில்லை யென்றும் கட்டுப்பாடின்றி ஆராய்ச்சி செய்தே அனைத்தையும் அறிதல் வேண்டுமென்றும மனம் போனவாறு பேசும் இவ்வேளையில் அறிஞர் பலரால் ஆஸ்திக சங்கம் அமைக்கப்பெற்றதும் மஹாநாடு நடத்தப்பெறுவதும் பாராட்டத்தககது. திருவாவடுதுறை மஹா சந்நிதான குருமூர்த்திகள் ஆதரவில் மஹா நாடு நடப்பது மிகமிகப் போற்றுதற்குரியது.

சைவத்தின நிலைக்களமாகிய ஆதீன கர்த்தாவர்கள் கால இயல்பையறிந்து ஆஸ்திக மஹாநாட்டிற்கு ஆதரவு கொடுகக முன்வந்த பேரன்பின்திறத்தைப் பெரிதும் போற்றுகின்றேம இவர்களைப் போல் மற்ற ஆதீன கர்ததர்களும ஆதரவுகொடுத்ததனுல் நாடெங்கும ஆஸ்திகம பரவி, நாஸ்திகம நாட்டைவிட்டு ஓடி நாசமடையும. ஆகையால் மற்ற ஆதீன மஹா சந்நிதானங்களும ஆஸ்திக இயககத்திற்கு ஆதரவு கொடுததுதவ அடிபணிந்து அனபுடன் வேண்டுகின்றேம. தர்மபுர ஆதீன குருமூர்த்திகள் தற்பொழுது தென் நாட்டு யாத்திரை செய்து வருவதும் நாஸ்திகம நாசமாகி ஆஸ்திகம் அதிகரிக்கவேண்டி அருளுள்ளங் கொண்டென்றே அநுமானிககின்றேம். குருமூர்த்திகள எழுந்தருளும இடங்களெல்லாம சைவத்தைப்பற்றிய சொற்

பொழிவு நிகழ்த்தியருளப்பன்முறைபணிவுடன் விண்ணப்பிக்கின்றோம். ஆதீன கர்த்தர்கள் ஆஸ்திகத்தை அதிகரிகக அடிகோலும் பொழுது நாஸ்திகம் நாட்டைவிட்டு நகன்று நாசமாகுமென்பதில் ஐயமுண்டோ?

ஆஸ்திக மென்பது கடவுள் உண்மை உரைப்பது. அது ஒரு சமயத்திற்குமட்டுமன்றி எல்லாச் சமயங்களுக்கும் ஏற்றதாகும் அன்றியும் நாஸ்திகம் பேசுகிறவர்கள் கிறிஸ்தவ மதத்தையும் ஹிந்து மதத்தையும் ஏழனஞ்செய்கின்றனர். இன்னும எம் மதத்தை ஏழனஞ்செய்வரோ யாம் அறியோம். ஆதலால் ஆஸ்திக மஹாநாட்டிற்கு கிறிஸ்தவ மக்களையும மகமதிய மக்களையும அழைத்தல் அவசியமெனக் கருதுகின்றோம் இந்தியாவில் பல் வேறு மதங்களிருப்பினும் ஹிந்துமதமும, கிறிஸ்தவமதமும், மகமதிய மதமுமே பெருமபாலும் மக்களால் கையாளப்படுகின்றன. ஆகையால் மும்மத மக்களும ஆஸ்திக மஹாநாட்டில் கலந்துகொள்ள வேண்டியதவசியம். நாஸ்திகர்களும நாணமுற்று நடுங்குவர். இனி, நாஸ்திகர்கள் நாங்கள் கடவுளில்லையென்று சொல்லவில்லை ஆலயம அனாவசியம தேர் திருவிழா அனாவசியம் என்றுதான் சொல்லுகின்றோம என்கின்றனர். இவர்கள் கூற்று கொலைசெய்யவில்லை சித்திரவதைதான் செய்கின்றோம் என்று சொல்லுவது போலிருக்கின்றது. தற்பொழுது ஆஸ்திகத்திற்கு ஆதரவளிக்க முன்வந்த ஆதீன கர்த்தர்கள் முற்பொழுது முனைந்து நின்றால் நாஸ்திகம நாட்டில் பரவியிராது.

கால இயல்பையறிந்து சைவ நிலைகுலையாதவாறு சைவத்தைப் பேண வந்த திருவாவடுதுறையாதீனம தர்மபுரம ஆதீனம் முதலிய மஹா சந்நிதானங்களுக்கு மீண்டும நமது வணக்கத்தைச் செலுத்துகினறோம. மென்மேலும சைவ வைணவ ஆதீனங்களெல்லாம் சமயத்தைப் பேணிச் சொற்பொழிவுகள் ஆங்காங்கு நிகழவும துண்டுப் பிரசுரங்கள் பல்லாயிரக்கணக்காகப் பரவவும மாத,வாரப் பத்திரிகைகள் பலதோன்றி நிலவவும பொருள் முதலிய கொடுத்து ஆதரிக்க அன்புடன் விண்ணப்பிக்கின்றோம். பொருள் முதலியன கொடுத்து ஆதரிக்க ஆதீனங்கள் முற்பட

வில்லையானால் சைவமும் வைணவமும நிலைகுலைந்துவிடும். சொற்பொழிவுத் திறனுடையார் பலர்; இசை எழுதும் இயல்புடையார் எத்தனையோபேர்; என்செய்வர். "முனிவரும் மன்னரும பொன்னன் முடியும" என்பது போல் பொருளில்லையானால் என்ன செய்யமுடியும. சமய நலங்கருதியே நிலைபெற்ற ஆதீனங்கள் ஆரம்பமுதல் ஆர்வத்துடன் பொருள் முதலிய வற்றால் ஆதரவு கொடுத்துதவியிருக்குமானால் நாஸ்திகம் நாவெட்டாது நடபிணமாகிவிடும அந்தோ! சைவமும், வைணவமும், அவைகளின் குருக்களும், குருபீடங்களும் இகழ்ச்சியுரையால் என்ன பாடுபடுகின்றன. மாணிக்கவாசகர் கள்வராம், சமபந்தர் கொலைஞராம சீதை தட்டுவாணியாம, ஆலயங்களும் அறநிலையங்களும் கொலைஞர்குழாம் குடிகொளளும் நிலைக்களமாம். இப்புனனுரைகளையும புல்லறிவாளர்களையும் பொறுப்பர்கொலோ! ஒறுப்பர்கொல்! ஒரு தலை இதுவே. இவ்வேலையில் அறநிலையங்களான ஆதீனங்கள் அசந்து நில்லாது ஆதரவளித்தல் அவசியமன்றோ. ஆதரவளிகக முனவந்த ஆதீன குருமூர்த்திகளுக்குச் சைவமககள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருககிறார்கள்.

இனிச் சைவாதீன குருமூர்த்திகளுககு அடிபணிந்து அன்புடன விண்ணப்பிக்கும் விஞ்ஞாபனம் என்னவென்றால் சைவமரபும் சைவ சமயமும முன்னேற்றமடைதற் பொருட்டு நடைபெற்றுவரும் நமது "வேளாளனு"க்கு வேண்டும ஆதரவளித்து அருள்புரியவும சைவத்தையும் சைவமரபினரையும் செழிய நிலையில் வைக்கவும தாய்மொழியாந்தமிழ் மொழியைத் தலை சிறந்து விளங்கவைக்கவும் வேண்டுவன செய்தருளப் பிரார்த்திப்பதேயாம.

## இதுவோ சுயமரியாதை

கடவுளின் குணநிசயங்களைப் பேசும் கூட்டங்களிலும், காங்கிரஸ் கூட்டங்களிலும் கலகம் விளைத்தலும், கல்லெறிதலும கண்டுகொண்டால் நாணில்லையென்று நடுநடுங்கி நாணத்துடன நாவு குழறி நவிலுதலும், ஓட்டமபிடித்தலும பெரியார் சிறியாரென்ற பேதமின்றிப் பேசுதலும் முன் அகப்பட்டுக்கொண்டால் அடிபட்டு அப்பா அப்பா என்று அழுதலும, [illegible]யும் [illegible]யாதையின்றிப்பேசி அவமரியாதைப்படுவதோ சுயமரியாதை.

# மனிதன் நீண்டநாளிருக்க மருந்து.

திருவாளர் போ. முத்தைய பிள்ளையவர்கள்.

ஒரு நகரத்தில் நீண்ட ஆண்டுகளாக ஒருவன் சாவாமலிருந்தான். அரசர் ஒவ்வொருவரும் தம்முடைய குறிப்பில் இவனைப் பற்றி வரைந்து வருவாராயினர். பின்வந்த அரசனொருவன் இவனைச் சந்தித்துத் தம் முன்னோர் வரைந்து வைத்திருக்குங் குறிப்பைத் தெரிவித்து நீவிர் சாவாமலிருத்தற்கு உட்கொண்ட மருந்தென்னை யென்று கேட்டனன். அவன் அடியிற்கண்டவாறு அரசனுக்கு விடை கூறினன்.

மன்னவனுங் கோனன் மனைவியாளோ என்னுள்ளம்
என்னினுமோ அதிகம் என்னூரார்—பின்னுநான்
ஏவாமலேசெய்வர் என்மக்கள் மன்னநான்
சாவாமற் றின்ன மருந்து.

(இதன் பொழிப்புரை) தண்டனை செய்யும் அதிகாரமுடைய அரசனும் கொடுங்கோல் புரியான்; என் மனைவியோ என் மனமாவள்; நான் வசிக்கும் ஊரில் உள்ளாரோ என்னினுஞ் சிறந்தவராவர்; இவ்வாறன்றியும் என் மக்கள் எனக்கு வேண்டுவனவற்றை நான் ஏவாமலே செய்வர்; அரசனே! நான் சாவாமலிருத்தற்கு உட்கொண்ட மருந்து இதுவாகும் (என்றவாறு.)

(கருத்துரை) அரசனும் நல்லவன்; என் மனைவியும் நல்லவள்; என் ஊராரும் நல்லவர்கள்; என் மக்களும நல்லவர்கள். இவையே நான் சாவாமலிருத்தற்கு மருந்தாகும். என்பதாம.

பல பொருள்கள் சேர்ந்து மருந்தாமாறுபோல், இவையனைத்துஞ்சேர்ந்து மருந்தாயிற்று.

சாவதற்குக் காரணம பிராணவாயு அதிகமாக வெளியே கழிதல். எப்பொழுதும் பிராணவாயு பன்னிரண்டங்குலம் வெளி

யேவந்து எட்டங்குலம் உள்ளே செல்லும். எனவே ஒவ்வொரு முறையிலும் நாலங்குலம் கழியும். இது இயல்பான முறை. இம்முறைப்படி நடைபெறின் நூறுஆண்டு சாவாமலிருக்கலாம். நாலங்குலமும் வெளியே கழியாமல் யோகசாதனத்தால் உள்ளே தங்கும்படி செய்யின் நூறு வயதுக்கு மேலும் நீண்டகாலம் சாவாமலிருக்கலாம். இம்முறை அப்பியாசம் செய்யும் பருவம் வந்து அப்பியாசஞ்செய்தவர்க்குமட்டுமேயன்றி ஏனையோர்க்குக் கிடையாது. ஏனையோர் தத்தமக்கு விதித்த ஆண்டுவரைதான் சாவாமலிருத்தல்கூடும். எனவே, யோகப்பயிற்சி யுடையார் தமக்கு விதித்த ஆண்டைக் கடந்து வாழ்வரென்பது பெறப்படுமாறு காண்க. இவ்வுண்மையை,

காற்றைப் பிடிக்குங் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியதுவாமே,

எனத் திருமந்திரத்திலும்,

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு

எனத் திருக்குறளினும் கூறுமாற்றாற் றெளிக.

இவ்வாறு யோகாப்பியாசத்தால் பிராணன் அடங்கில் மனம் அடங்கும். மனத்தை அகத்து யாதானும் ஒரு குறியின் கண் நிறுத்தினும் பிராணன் அடங்கும். பிராணனும் மனமும் அடங்கில் பிறப்பிறப்பு நீங்கும்.

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப்பில்லை என்பது திருமந்திரம்.

மன அடக்கம் பிராண அடக்கம் என்னும் இரண்டனுள் பிராண அடக்கத்திற்குச் செய்யப்படும சாதனம் அடயோகம் எனப்படும். இது முற்றுப்பெறுதல் எளிதன்று; முற்றுப்பெறுது துன்பத்தைச் செய்யினும் செய்யும். மன அடக்கத்திற்கு செய்யப்படும் சாதனம் மிருது யோகம் எனப்படும். இது எளிதில் முற்றுப்பெறும். முறறுப்பெறுவிடினும் துன்பத்தைத் தாராது. ஆகையால் மன அடக்கமே சிறந்ததென அறிந்து கொள்க.

இந்த மன அடக்கம் மேலே கூறியவாறு அகத்து யாதானும் ஒரு குறியில் மனத்தை நிறுத்திப் பழகுதலானும், மனஞ் சலன மடைதற்குரிய ஏதுக்கள் - புறத்து இல்லாமையானும் சித்திக்கும்.

மேலே கூறப்பட்ட செய்யுள் மனம் சலித்தற்குரிய ஏதுக்கள் புறத்து இல்லாமையை விளக்கிற்று. எவ்வாறெனின், அரசன் தண்டிக்கும் அதிகாரந் தனக்குளதென்றெண்ணிக் கொடுங்கோல் புரியின், அந்நாட்டில் உள்ளார் மனம், வருந்திச் சலன மடையும்; செங்கோல் புரியின் அந் நாட்டி லுள்ளார் மனம், மகிழ்ந்து நிலைபேறடையும்.

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து" என்பது திருக்குறள்.

என்னையாளும் அரசன் செங்கோன்மை யுடையன் என்பதை வற்புறுத்தற்குக் கோனூன் என எதிர்மறை முகத்தாற் கூறினன். உம்மை தண்டிக்கும் அதிகாரம் உடைமையைக் குறித்த சிறப்பு.

இனி, மனையாள் எனப்படுபவள், நாயகன் கருத்தொடு மாறுபட்டவளா யிருப்பின், அவன் எத்துணைச் செல்வமுடையனெனினும் இல்லாதவனேயாவன்.

"மனையாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்". என்பது திருக்குறள்.

என் மனையாளோ நான் எதனைக் கருதுவேனோ அதனையே அவள் கருதுவள் என்பது தோன்ற மனையாள் என்னுள்ளம் என்றனன்

அரசன் செங்கோலுடையனெனினும், மனையாள் தன் கருத்தொடு மாறுபடாதவளெனினும், தான் வசிக்கும் ஊரில் உள்ளார் தன் கருத்தொடு மாறுபட்டவராயிருப்பின், தன் மனம் எப்பொழுதும் நிலைபேறின்றிச் சுழன்றுகொண்டேயிருக்கும். என் னூராரோ என்னினும் மிக நல்லவராயிருக்கின்றனர் என்பது தோன்ற என்னினுமோ அதிகம் என்னூரார் என்றனன்.

இவ்வாறு அரசனும் மனையாளும் ஊரும் நல்லவராயிருப்பினும் தன் மக்கள் தன் சொல்வழி நடக்கவில்லையாயின், அதனால் தன் மனம் சலனமடையும். என் மக்களோ நான் சொல்லாமலே என் கருத்தறிந்து செய்பவரென்பது தோன்ற ஏவாமலே செய்வர் என் மக்கள் என்றனன்.

"ஏவா மக்கள் மூவா மருந்து" என்பது ஔவைப் பிராட்டியார் திருவாக்கு.

ஆகவே, செங்கோலரசன் ஆட்சியாலும், நல்லவர்கள் வசிக்கும் ஊரில் வசித்தலாலும், மனைவி மக்களது நற்குண நற்செயல்களாலும் மனம் சலனமின்றி நிலைபெற்று மனிதன் நீண்ட நாள் சாவாமலிருப்பன் என்பது பெறப்படும்.

---

## வேளாள மரபினர் விழுமிய தன்மை

### பேட்டை, திருவாளர் வா. ராமலிங்கம் பிள்ளையவர்கள்

நமது வேளாள மக்களுக்கு "வேளாளர்" என்ற பெயரானது "வேளாண்மை" என்ற பதத்துக்கு உழவு தொழில், உபகாரம் அல்லது கொடை என்ற பொருள் கூறப்படுதலின், அவ்வுழவு தொழிலே உரிமைத் தொழிலாய்க் கொண்டமைபற்றியும் அது காரணமாக யார்க்கும் உபகாரம் செய்யும் உத்தமக்குணம் படைத்தமை பற்றியும் காரணப் பெயராகவே எழுந்ததெனப்படும். அன்றியும், பிரமாவின் முகம், புஜம், தொடை, பாதம் முதலிய நான்கு இடங்களினின்றும் தோன்றியதாகக் கூறப்படும் வருண பேத முறையிலும் இம்மரபினரைச் சிலர் நான்காவதாகிய சூத்திர வகுப்பில் சேர்த்துரைத்தல் தவறே. இவர்கள் வரலாறு இனிது கூறப் புகின் சிவபெருமான், பார்வதிக்கு, கணபதி, முருகன் என்ற இரு குழவி யருளியது கண்டு, கங்கை தனக்கும் ஏற்றமுடைய புதல்வர் தோற்றும்படி வேண்டியதுபற்றி அவர் திருக்கண்ணால் கங்கையை நோக்க அதுபோது தெரித்த பொரியில் தோன்றியவரே வேளாளர் எனவும் இதுபற்றியே இவர்கட்குக் கங்கா புத்திரர் என்ற பெயர் வழங்குவது என்றும் கூறுப. இவர்கள் முக்கியத் தொழில் உழவு

உலகிடை வாழும் உயிர்கள் யாவற்றுக்கும் உணவே முக்கிய ஆதாரம். உணவுப் பொருள்கள் சேகரித்துக்கொள்ள உழவுத் தொழில் வேண்டப்படுவது ஆகவே உழவு தொழிலின்றி உயிர்கள் நலம்பெற வாழ்தல் கூடாததாகும். இதுபற்றி

''சுழன் றுமேர்ப் பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை''

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின் செல் பவர்''

எனவரும் பொய்யா மொழி பெரிதும் குறித்துணரத்தக்கது

அகிலமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளும் அரசேயாயினும் உழவர் உதவியை நாடியே நிற்கவேண்டும். உழவு தொழிலால் விளைவு செழித்தாலன்றி அரசுமுறை அமைவுடன் நடத்தல் இயலாதாகும். இது குறித்துச் "செங்கோலை நடத்துங் கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே'' என முன்னோர் மொழிந்தமை காண்க. யாவருமே இவர்தம்முதவி எதிர்நோக்கி நிற்குந் தன்மையால் இவர் மேன்மையுடையராவர். இத்தொழில் நமது வேளாண் மக்களால் தற்காலக் கல்வித்துறையாலும் நாகரீகமெனக் கருதும் கூடாநட்பாலும் இழிவென விலக்கப்பட்டு சேவகம் செய்யும் அடிமை வாழ்க்கையே ஆனந்தமாக ஏற்றுகொள்ளப்படுகிறது. நிற்க.

உழவு தொழிலோ ஒருவர்க்கு அடிமையின்றித் தனக்குத் தானே மனமகிழ்வோடு மடிமையால் பீடிக்கப்பெறுது குடிசெயல் வகைக்குக் குறித்த வளம்பெரு செல்வம் விளைவு மிகுதியால் அளிக்கவல்லதாதலோடு மனச்சோர்வு என்பது எனைத்தானுமின்றி உடல்வலியும் மனவலியு மொருங்கு பயக்கும் பெற்றித்தாயது. விளைவு மிகுந்து செழிக்கவே இரப்பவர்க்கும் மற்றும் ஏழைகளுக்கும் இல்லை என்னுது கொடுத்துதவும் மணப்பான்மைக்கு இடந்தருகின்றது. இவ்வுழவு தொழிலில் விதைக்குங் காலத்தும் அறுக்குங் காலத்தும் பலருக்கும் மேரை முதலிய முறையால் அவ்வவ் வித்துக்களும் விளைபொருள்களும் உதவுதல் இன்றும் வழக்கத்திலிருப்பது யாவருமறிந்தது.

தவிர தமிழ்ப்புலவர்களைத் தக்கவாறு ஆதரிக்கும் தன்மை வேளாளரிடம் தோன்றுதொட்டே மிக்குப் பொருந்தியுள்ளது. இதையுணர்த்தக் கவித்திறம் மிகுந்த கம்பர் சோழராஜனிடம் கொண்ட ஊடலால வேற்றூர் செல்லுங்கால வழியில பசிநோய் மிகுந்தபோது ஒவ்வொருவரிடமாகப பலரிடமும வேண்டியும் பசி தணிக்கப்பெறாது கடைசியாகக் கழனியில உழுதுகொண்டிருந்த வேளாளனால கட்டமுது பகிர்ந்து கொடுக்கப்பட்டமையே சான்றும். இதுபோழ்து அவர் பாடிய

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள வாசலவழிப் போகோமே—முட்டிபபுகும
பார்பபாரகததை யெட்டியும பாரோமே எந்நாளும
காப்பாரே வேளாளா காண்;

என்ற பாடல் கவனிக்கற்பாலது.

புலவர்களைப போற்றும நலமிகுசெயல் இவர்கள்பாலுற்ற தற்கும ஏற்ற காரணமுண்டு என்னெனிற் கூறுதும. இம்மரபினர்க்குத தமிழ்பபுலமைததிறம இயற்கையிலேயே பொருந்தியதொன்றும. இன்னோர், இளைஞர்களும பெண்டிரும ஏனையோரும சாதாரணமாகப பேச்சு முறையிலும, விளையாட்டுப பாட்டுக்கள தாலாட்டுகள, கண்ணிகள முதலியவைகளிலும எதுகைமோனையோடும தக்க கருததமைந்தவண்ணமாக மொழிவதை இன்றும காணலாகும. இதுவுமன்றி மதுரைத் தமிழ்ச்சங்கததுள் கடைச சங்க காலததில சஙகததிலமர்ந்து புலமை நடாததிய புலவர்கள் பலராக அவருள இன்னோரென அறியககிடந்த இருநூற்றுவருள், வேளாளர் 51; பெண்பாலர் 36, அந்தணர் 29, நாகர் 17; எயினர் 13, கம்மாளர் 7, வணிகர் 7; மள்ளர் 5, ஆயர் 3, குயவர் 1, பரதர் 1, வள்ளுவர் 1, பாண்டிமன்னர் 13, சேரமன்னர் 7, சோழமன்னர் 1; தொண்டைமான் 1, எனககூறப்படுவதில் புலமைத் திறததில வேளாளரே மிகுந்திருத்தல விளங்கும் ஆனதுபற்றிக் "கற்றாரைக கற்றாரே காமுறுவர்" என்றபடி புலவர்களை நலம் பெறப போற்றலுற்றாரென்க.

வேளாண் மரபினர் எக்காலத்தும் விருந்தோம்பலைத் தங்கள் விழுமிய செய்கையென விரும்பிச்செய்துவரும் தன்மையர் தன்னகத்தில் ஒரு அயலார் பசித்திருக்கத் தான் தனியே களிப்புடனுண்ணும் வழக்கம் இவர்களபாலில்லை. இதை உணர்த்த "வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான" என்ற வாக்கு எழுந்தமை காண்க. ஆகவே ஏழைகளுக்கும் உற்றார்க்கும் கற்றார்க்கும் மற்றோர்க்கும் களிப்புடன் இயன்ற உதவிபுரியும் பெருமையும்

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற, லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின"

என்றவாறு பசிநோயைப் பொறுப்பாரினும் அப்பசியை நீக்குபவரே தலையாதலால் அச்செய்கைபற்றிய ஏற்றமும் இம்மரபினர்க்கே உரித்தாதல் தெளிக. இம்மரபினர் கொடைத்தன்மையை விளக்க

ஆதிலாகுச் செம்பொ னளிக்குங்கை யாகங்கள்
வேதபுராணங்கள் விரிக்குங்கை நீதிநெறி
மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை யானதமிழ்
கல்லாக ளென்னுமல் கற்றோக ளென்னுமல்
எல்லாரையுங் காத்தீடேற்றுங்கை வல்லமைசேர்
மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோல
கைம்மா றிலாதளித்த கற்பகக்கை சும்மையார்
ஊருணிநீர்போ லுகத்தவாக்கெல்லாம்
பேரறிவாளியும் பிரதாபக்கை பாரில
உடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே
கொடுக்கவிசைந்த குளிர்க்கை யிடுக்கணினல்
மாமறையோர் மன்னரொடு வந்தடுத்த சூத்திரருந்
தாமலையாமற் கொடுத்துதந் தாங்குங்கை.

என வேளாளர் திருக்கை வழக்கம் மொழியப்பட்டமை ஈண்டு குறிக்கத்தக்கது இஃது இவ்வாறாக இவ்வேளாண் மரபினரியல்பு பத்து எனவும் கூறுப. அவை:—

1. ஆணைவழிநிற்றல்
2. அழிந்தோரை நிறுத்தல்
3. கைக்கடனாற்றல்
4. கசிவகத்துண்மை
5. ஒக்கல்போற்றல்
6. ஓவா முயற்சி
7. மந்திரை தருதல்
8. ஒற்றுமைகோடல்
9. விருந்தோம்பல்
10. திருந்தியவொழுக்கம்.

என்பன

இஃதன்றி எம்மரபினர்க்கும் மேலானதோர் செம்மை நெறியும் இவர்கள்பாலுளது. என்னையோ எனின் கொலை புலை கொள்ளாமையே. பிற மரபினரில் சிலருக்குப் புலாலுணவும் பின்னும் சிலருக்கு ஒவ்வோர் சமயங்களில (யாகம்போன்றவற்றில) மட்டும் புலாலும் விதிக்கப்பட்டுளது இம்முறையானுணரக்கிடப்பது.

வழக்கமாகப் பூர்வீகம் புலாலுணவு கொண்டுவந்த இவர்கள் இடையில் ஒழுக்கத்தைச் செவ்வைப்படுத்த முற்பட்டு அவற்றை ஒதுக்கினர் என்பதும், எனினும் அப்பழக்கம் அறவே நீக்குதற்கொண்ணாத தன்மையால் 'யாகம்' என்றும் அதில்மட்டும் புலால் கொள்ளலாமெனவும் ஏற்படுத்திக்கொண்டனர் என்பதுமே பொருந்தும். விரிக்கிற் பெருகுமாதலின் நிறுத்தி எடுத்துத் தொடுத்துரைப்பாம்.

இவ்வாறுள்ள கொலை புலைக்கான எவ்விதச் செய்கையேனும் இவர்களிடம் எக்காலத்தும் எக்காரணம்பற்றியுமில்லையெனக. (இக்காலம் சேர்க்கையால் நிலைதவறினமையை ஈண்டு கொள்ளற்க) இச்செம்மைநெறியால்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந்தொழும்."

என்ற பொய்யாமொழிக்கிணங்க வெவ்வுயிருந் தொழுதற்கான பெற்றியும் இவர்கள்பாலுளது.

இக்கூறியவாற்றால் எத்தாலும் இம்மரபினர் புகழுக்கே உரியர் என்பது இனிது புலனும்.

பாணியிற கஙகைகநதி மலையினிற் கைலைமலை
பாரழகினிற றண்டகம
பழமொழிய வெளளைவசொல லாசரிற சோமான
பத்தியிற சிறியதொணடன
காணியிறறொணடையாம புகழில் வேளாளரபுகழ்
கான்முனையிற பகீரதன

எனறமை காண்க.

காலவழுவால நிலைமை தளாந்துநிறகுமிம மரபினா பண டைப் புகழை நனறே பெறவும அதறகியைநத சாதனமாகத் தோன்றிய நம "வேளாளன்" பததிரிகை நீடிதது நிலவி பீடுறறு ஓஙகவும எலலாமவலல பரமபொருளை இறைஞசுவோமாக.

---

## அற்புதங்கள் செய்யும் அம்மையார்.

திருசசி ஜில்லா உடையாரபாளையம தாலுகா கீழமாளிகைக கிராமத்துககு ஒரு மைல தூரததுள்ள மருதூர் எனனும கிராமத தில இருவருள் வஙியால வியககததகக அறபுதஙகள செய்யும அமமையாா ஒருவா வாழ்ந்துவருகிறாா இவவமமையாா செங குநத மரபிற றோனறியவா. இவா பெயர் தெய்வயானை இவ ருககு இபபோது வயது முபபததேழு. இவா கணவருடன இல்லறததிலிருநது வருகிறாா. இவருககு ஓா ஆணபிளளையும மூனறு பெண்களும உணடு வழிவழியாக முருகனை வணங்கி வரும குடுமபததைச சோநதவா இவா கல்வி கறகவிலலை. இவ ரது கணவனுககு நெசவுத்தொழில.

இவவமமையாா தமது உஉ-வது வயதில் ரு வயதுடைய தம ஆண் குழநதையை யிழந்தார் அதுமுதல சிலநாள் வரையில் அககுழநதை புதைககப்பட்ட இடததிறகுபபோய் வருநதி யழுதுவந்தார் ஒருநாளிரவு தாம பழநிககுச செனறு முருகனை வணஙகியதாகவும, காவடிகளைக கணடதாகவும கனாககணடு விழிததாா. இக கனாககண்ட சினனாளுள் சில பெணகளோடு

ஏரிக்குக் குளிக்கச் சென்றார். தலைக்குத் தேய்த்துக்கொள்ளத் தக்க துணிஞ்சித் தழை ஒடிப்பதற்கு, அங்குள்ள அம் மரத்தில் ஒரு துறட்டை மாட்டி யிழுத்தார். அத்துறடு தன் கையினின்றும் நீங்கி வானோக்கிச் சென்றது. அதுகண்டு அஞ்சி உற்று நோக்குங்கால், கருநிறமுடைய ஒரு மனிதன் தன்மீது கரிய கம்பளம் ஒன்றைத் தலையிலிருந்து முதுகு புறமாகத் தொங்கவிட்டுக்கொண்டு அத் துறட்டைப் பிடித்துப் போவதாக புலப்பட்டது. பிறகு, அவ்வம்மையார் தமது தலையின்மேல் பெருஞ் சுமையிருப்பதுபோலத் தோன்ற, இஃதென்ன புதுமையாயிருக்கிறதே யென்று கீழே குனிய, தமது தோளிலிருந்து ஒரு மனிதன் கரிய மேனியும் கச்சும் கோவணமும் உடையனாய், கலீரென்ற ஒலியுடன் தம் முன்னே போனதைப் பார்த்து, மிக அஞ்சி வந்து தம்முடன் குளிக்கவந்த பெண்களிடம் நடந்த வரலாற்றைச் சொல்லிக் குளித்து வீடுசேர்ந்தார்.

சேர்ந்தவுடன் அப்பெண்கள் நடந்த வரலாறுகளை அவ்வம்மையாரின் கணவன் மாமன் மாமி முதலியவர்களிடம் சொல்ல, அவர்கள் மிகவும் கவலைகொண்டு அவ்வம்மையாருக்குப் பேயோ பிசாசோ பிடித்துவிட்டது என்று கொண்டு, பூசாரிகளை யழைத்துப் பேயோட்டத் தொடங்கினார்கள். ஏரியின் அருகே நடந்த செயலிலிருந்து, அம்மையார் தமதுணர்வின்றிப் பித்தர்போல முருகன் கோவிலுக்கு அடிக்கடி போய்வரும் வழக்கமுடையவரானார். அதுகண்ட கணவர் முதலாயினார், அவ் வம்மையாரை ஒரு வீட்டிலடைத்துப் பூட்டி வைத்தார்கள். இச் செயலைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண் ஏரிக்குக் குளிக்கச் சென்றாள். வீட்டி லடைக்கப்பட்டிருந்த அம்மையார் தனக்கு முன்னே அவ் வேரியில் குளித்துக்கொண்டிருந்ததைக் கண்டு வியப்புற்று, 'அம்மே! வீட்டிலடைக்கப்பட்டிருந்த நீ இங்கே எப்படிவந்தாய்? இஃதென்ன மாயம்:" என்று கேட்டாள். அதற்கு, "நான் ஏரிக்கு வந்த பிறகுதான் எனக்கு உணர்வு வந்தது:" என்று சொன்னார். அதனை, அப்பெண் வீட்டுக்குச் சென்று அம்மையாரின் கணவன் முதலியவர்களுக்குத் தெரிவிக்க,

அவர்கள் இது கடவுளின் திருவருட் செயல் எனத் தெளிந்து, பேயோட்டுத லொழிந்தார்கள்.

இது நிகழ்ந்த சின்னாளுள் பங்குனி உத்திரம் வந்தது; அன்றையத்தினம் அம்மையார் பல ஏழைகளுக்கு அன்னம் அளிப்பது வழக்கம். அன்று வீடு வாசல்களைச் சுத்திசெய்துவிட்டு, ஏரிக்குப்போய் நீராடி வீட்டுக்கு வந்தார். வீட்டினுள் ஓர் அறையில் ஐந்தாறு காவடிகள் இருக்கக் கண்டு, இது முருகனது திருவருட் செயல் எனத் துணிந்து, சமயல்செய்து அக் காவடிகட்கு முன்னர் வைத்துப் படைத்து, அப் பிரசாதத்தைப் பலருக்தும் அளித்தனர். அன்று தொட்டு அவ்வம்மையாரிடம அற்புதச் செயல்கள் நிகழ ஆரம்பித்தன.

ஒரு சமயத்தில் அவ்வம்மையார் முன்னர் வானிலிருந்து திருவெண்ணீற்றுப் பையும், உருத்திராக்க மாலையும், வெள்ளி வேலும் துள்ளிவந்தன. பிறிதொரு சமயத்தில், அம்மையார் ஒரு தாம்பாளத் தட்டில் தழையையும் வைக்கோலையும் கிள்ளிப் போட்டு மேலே தூக்க, தேங்காய் கற்பூரம் வெற்றிலை மலர் இளநீர் பழம் முதலியன வந்தன. இன்னொரு சமயத்தில் ஒரு கற்றை ஊதுவத்தி வானிலிருந்து துள்ளி அம்மையார் கரத்தில் வீழ்ந்தது: மற்றொரு சமயம பழநியில் வேலருக்கு அபிடேகமான தீர்த்தம ஒரு செம்பில் வந்தது. பின்னொரு சமயத்தில், அம்மையார் ஒரு பையனை மண் பிசைந்துவரச் சொல்லி, அம மண்ணை இருகூறாக்கி அவற்றை யிரண்டு காகிதங்களில் வைத்து அவைகளின்மேல் திருநீறு தூவி, ஒரு பாகத்தை அங்கிருந்த ஒருவர் கையிலும் 'மற்றதை வேறொருவர் கையிலும் கொடுத்து மூடிக்கொள்ளச் சொன்னார்: சிறிது நேரங்கழித்துத் திறந்து பார்க்கச்சொல்ல, ஒருவர் கையிலிருந்தது நல்ல வெல்லமாகவும, மற்றவர் கையிலுள்ளது கட்டிக் கற்பூரமாகவும் காணப்பட்டன; அதுகண்டு எல்லாரும வியந்து அவ் வெல்லத்தையுண்ண மிகவும் இனிமையாயிருந்தது. அங்கோர் வீட்டிலுள்ளார், தமது வீட்டில் சில படிகளில் அரிசி வைத்து, அதனைப் பழநிக்கு அனுப்பி அங்குள்ள குருடு நொண்டி முதலிய ஏழைகளுக்கு அளிக்கவேண்டுமென அம்மையாரை

வேண்டிககொள்ள, சிறிது நேரததிறகெல்லாம அவ்வரிசி காணப படவிலலை ஒருவர் ஒரு பலாபபழததை அமமையாரிடம கொடுத்து, அதனைப பழநிககு அனுபபுமபடி வேண்ட, அமமையாா அப் பழததை யெடுதது மேலே தூக்க, அபபழம காணுமற போயிறறு. களைபபுற்ற ஒருவர் முகவாட்டததைக கண்டு, அமமையாா ஒரு தட்டில குவளையொன்றை வைத்து மேலே தூககினாா; அக குவளை மறைநதது. சிறிது நேரத்துள் அதே குவளையில் பால வநதிருகக, அவருககு அபபாலை யருத்தித தெளிவிததாா. ஒருநாள அமமையார் தமது நாவை யிழுத்து அரிநது ஒரு வாழையிலையில வைத்தார், நாதுடித்தது. பின வாயைக கட்டிககொண்டு கையை யேந்தி நிறக, ஒரு சிறு செமபில தூய நீா வர, அநநீரை அமமையாா வாயில் விட்டுககொள்ள, உடனே நாககு முனபோலவே வளாநதுவிட்டது. இவைபோலும பறபல அற்புதஙகள் இனறும நிகழ்நதுகொணடிருககின்றன.

இவ்வமமையாா திருவருளியககத்தாற கூறிய வாககின் வண்ணமே, கீழமாளிகை திரு. கனகசபையெனபாா தனது எண்ணம நிறைவேறி இப்போது திருவையாறு வடமொழிக கலலூரியிற கலவிபயினறு வருகிறாா. மகபபேறினறி வருநதிய விருத்தாசலம ஹைஸ்கூல தமிழ்பபணடிதா திரு. சுநதாராஜ உடையாா நனமகபபேறு பெறறனா திரு. வேலாயுத முதலியாா ஓர் வழககில வெற்றிகொணடார். இன்னும, மகபபேறிலலாதவாகள அமமையாரிடம வந்து தெரிவித்தால, அமமையாா அவாகளைப பாாதது, "அமமா! உனககுப பிள்ளை பிறந்தால அப பிள்ளையைப பழநிககு அனுபபுகிறாயா?" எனககேட்பாா. அதறகுடனபட்டவாககு அவ்வாறே மகபபேறு வாய்ககிறது; குழநதை பிறநத மூனறும மாதம அமமையாரிடம அபபிள்ளையைக கொடுபபாாகள அமமையாா அபபிள்ளையை ஓர் தாமபாளததில வைத்து மேலே தூககுவாா. பிள்ளை காணுமற போய்விடும நாலைநது நாழிகை கழிதது அமமையாா முன்போலவே தாமபாளததை மேலே தூககுவாா; அபபோது அக குழந்தை மொட்டையடிககபபெறறு திருவெண்ணீறும உருத்திராகக மாலையும அணிந்து

கொண்டு அத் தட்டில வநதிறஙகும். இனனுஞ்சிலா, தாஙகள நினைத்த காரியம முடியுமா? அலலது முடியாதா? எனறு அம மையாரிடம கேட்பாாகள. அபபோது, அமமையார் அவாகளிடம மண்ணுஙகட்டி புழுதிமண முதலிய பொருளகளைக காகிதத்தில் வைதது மடித்து அவர்களிடம கொடுபபாா. அககாரியம முடியுமெனறால், அவை கறபூரம கற்கணடு சாககரை முதலான நலல பொருளகளாக மாறியிருககும முடியாதெனறால கரி எரு முட்டை முதலான நன்மையிலலாப் பொருளகளாக மாறியிருககும. இவவாறு மாறும வகையைக கணடுதான அமமையாா பலாபலனகளைப் பிறருக்குச சொலலி வருகிறாா

வானிலிருநது வரும பொருள்கள இரணடு முழத்திறகு மேல் வரும்பொழுதுதான் தெரிகினறன. போகும பொருளகளும அபபடியே, அவை எங்கிருந்து வருகின்றன எனறு கேட்டால், அமமையாா அவையெலலாம பழநியிலிருநதே வருகினறன எனறு சொல்லுகிறாா

இவவமமையாரது அருஞ்செயலகளைப் பார்கக விருமபுவோா, திருசசிககும விழுபபுறததிறகும புதிதாக அமைககபபட்டிருக்கும இருபபுப் பாதையில சேந்துறை ஸ்டேஷனிலிறங்கி அமமையாா வசிககும மருதூர் எனனும கிராமததிற்குப போய்ப பாாககலாம.

*தெய்வமில்லை, திருவருட் செயலிலலை, சைவ சமயாசாரியர் முதலிய அருள வள்ளலகள செயத அறபுதங்களெல்லாம பொய்யும புரட்டுமாகும, எனறு நாத்தழும்பேற நாததிகம பேசி நாட்டைக கெடுககும சுயமரியாதைககாரரும, அவாகளது போதனைவலையிற பட்டுழலும புலலாகளும இவவமமையாரின் அறபுதஙகளைக கண்டறிநதேனும ஆத்திக புததியடைவாாகளாக!

---

வேளாளர் வறுமையினினறு நீங்கி செலவநிலையிற சிறகக வேண்டுமானால அழுககாறு அகற்றி அனபு பெருககி விவசாயம, வியாபாரம, கைததொழில்களைக கடைபபிடிதத தொழுகல் வேண்டும

## நமது சமய ஒழுக்கம்

திருவாளர் ஆ. சங்கரநாராயண தேசிகர் அவர்கள்

107-ம் பக்கத் தொடர்ச்சி.

### சிவதீக்கை

சிவபெருமானையும், அவனது அடியார்களையும், குரு முதலானவர்களையும் அன்புடன் வழிபட்டு நெறிமுறை நழுவாது நிகழ்த்தற்குரிய சைவ சமயி ஆதற்கு, நல்ல ஆசிரியர்மாட்டு அருள்பெற்றுக்கொள்வதே தீக்கையாகும். அது வருணாச்சிரம பரிபக்குவ நிலையாதிகட்குத் தக்கவாறு நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், அவுத்திரி எனனும் ஏழு பிரிவினையுடையதென்று, ஆகம சாஸ்திரங்களி லமைக்கப்பெற்றுள்ளது. அவற்றுள் அவுத்திரி தீக்கை சமயம், விசேஷம், நிருவாணம் எனனும் மூன்று பேதமுடைத்தாகும்.

இனி, நோக்க தீக்கையாவது—ஆசிரியன் சிவோகம் பாவனையால், தனது விழிகளைச் சிறிது திறந்து, மாந்திரீகன் கருடபாவனையாலே பாம்பு தீண்டியவனை அவ்விஷம் நீங்கப் பார்த்தல் போலவே, சிஷ்யனை சிவபாவனையால் நோக்கிப் பாசநீக்கம் செய்வது.

பரிசதீக்கையாவது—ஆசிரியன் தனது வலக்கரத்தை சிவனது கரமாகப் பாவித்து அருச்சனைபுரிந்து, சிஷ்யனுடைய சிரசு முதலான ஏனைய அங்கத்தினையும் தொட்டு அருள்செய்து, பாசபந்தம் நீக்குவது

வாக்கு தீக்கையாவது—ஆசிரியன் சிவோகம் பாவனையால், சிஷ்யனை சிவனது திருநாமஞ்ஜபிக்கும்படி, உபதேசஞ்செய்வது. அதாவது, மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொடுத்து, அரசத்துமாரத்தியின் ஊமையை போக்குவித்தல் போல்வது.

பாவனைதீக்கையாவது—ஆமை தனது முட்டையை மனத்தால் நினைத்துப் பிள்ளையை அதினின்றும் வெளிப்படுத்துவது

போல், ஆசிரியன் சிவோகம் பாவனைகொண்டு மனோவியாபாரத்தால், சிஷ்யனை நினைத்துப் பாசநீக்கம் செய்வது.

நூலெனும் சாஸ்த்திர தீக்கையாவது — ஆசிரியன் சைவ சாஸ்த்திரங்களைப் பிழையறச் சிஷ்யனுக்குச் சொல்லிவைத்து, அதனால் நலனெய்தச் செய்வது.

யோக தீக்ஷையாவது—ஆசிரியன் நாலிதழ்த் தாமரையாகிய மூலாதாரம், ஆறிதழ்த் தாமரையாகிய சுவாதிஷ்டானம், பத்திதழ்த்தாமரையாகிய மணிபூரகம், பன்னிரண்டிதழ்த் தாமரையாகிய அநாகதம், பதினாறிதழ்த் தாமரையாகிய விசுத்தி, இரண்டிதழ்த் தாமரையாகிய ஆக்ஞை என்னும் ஆறுதாரங்களையும் சிஷ்யனுக்கு வருணனுக்குணமாகத் தெரிவித்து, யோக சாதனஞ் செய்விப்பது. இவ்வாறு தீக்கைகளையும், மற்றொரு விதமாக,

"ஆரைபுனல் மீன்போல் நோக்கி, ஆமைபோ லகத்திலுன்னி பறவைபோற் பரிசஞ்செய்து, பண்புடன் மொழியுங்கூறி நிறைதரு சிவமுண்டாக்கி, நீதிவேட்டுவனைப்போல, மறைமொழியுரைக்கும் ஞானமுரைப்பவன் மாசிலாசான்."

இதன் பொருள்—மீன் (தன்து முட்டையை நோக்கிக் காப்பாற்றுவது) போல நோக்கி (நயன தீக்கையும்) ஆமை (தனது முட்டையைநினைத்துக் காப்பாற்றுவது)போல மனதால் நினைத்து (பாவனாதீக்கையும்) கோழி (தனது முட்டையை இறக்கையாற் தழுவிக காப்பாற்றுவது)போல(பரிசதீக்கையும்) அவரவர் பரிபக்குவத்துக்குத் தக்கவாறு) குணத்துடன் உபதேசஞ்செய்து (வாசக தீக்கையும்) (தன்னை) சிவோகம் பாவனையுண்டாக்கி (குளவியானது காட்டிலுள்ள புழுவை எடுத்துக்கொண்டுவந்து, தன் கூட்டிலடைத்துவைத்து எப்பொழுதும் மூன்றுகொண்டேயிருந்து, அப்புழுவைத் தன்னுடைய தன்மையும், உருவமும் பெறச் செய்வது) போல (சிஷ்யனைச் சதாகாலமும் தன்னுடனிருக்கச்செய்து) அதிக இரகசியமான சைவ சாஸ்த்திரங்களை உபதேசித்து (சாஸ்த்திர தீக்கையும்) ஞான (யோகத்தின் விபரங்களை யாவும் விடாது கூறி யோக சானத்திற்) பயில்வித்து (யோக தீக்கையும் செய்

தருளுவோனே குற்றமற்ற ஆசிரியன் என்று கூறப்படுவதுங் காண்க.

அவுத்திரி தீக்கையாவது—மண்டபம், ஓமகுண்டம், வேதிகைகள், கும்பம் முதலியவைகளுடன், அதற்கேற்ற முறையே நிகழ்வதாகும். அது முற்கூறியதுபோல் சமயதீக்கை, விசேஷ தீக்கை, நிருவாணதீக்கை, என மூன்றுவிதப்பட்டதாகும். மேலே கூறிய ஆறுவகையான தீக்கைகளும், சைவ முத்திராதீக்கையும், அவுத்திரி தீக்கையிலடங்கியதாகும்.

"ஹௌத்ரீ தச தீக்ஷா தாமயைவமுக்தா வீக்ஷாதி தீக்ஷா அபிஷ்டவிதஸ்தா ஹௌத்ர்யந்தராபதா ஹி தத்ராவிசேஷா தீக்ஷாந்தரா வாகஹரமவதந்தி"

என்னும் சைவபூஷணம் 186-ம் சுலோகத்தினு லுணர்ந்து கொள்க. இதில் சைவ முத்திராதீக்கையானது—உருத்திராக்கம் முதலான சிவ சின்னங்களை, மந்திரபூர்வமாக ஆசிரியன் சிஷ்யனுக்கு அணிவிப்பதாகும்.

சைவ முத்திராதீக்கையும் மிக அத்தியாவசியமென்பதற்கு உபதேச காண்டத்திலே,

"மெய்யரும்பிய வோவையின் விரிபுனலாட்டின், மையருமபிய மழையினின் மக்கணமெய்ந் நெருக்கிற, நெயவ வெண்டிரு நீற்றணி சிதைதருஞ் சிதைந்தால, வெய்ய பூதவெங் கழுதாலரக்கரான மெலிவார்".

"அலங்த மாமணி யுருத்திர வக்கமொன்றணியின, விலங்கெயிற்றுவெம பூதமே முதலியமேவா, பொலங்கொண்மாமணி புனைதரிற்போகந்ரு நித்த விலங்கு மாமணி நீற்றொடும் புனைவதற் கிசையும்"

என்பதாலும், சைவ சமய நெறிகதுறள

"பூண்பதற்றுக கண்டியினைக கூசியிடும் புலியரைக
காண்பதற்குக கூசுமான் கைத்து"

என்பதாலும், நாம் தெரியககிடக்கின்றது.

(தொடரும்)

# வேளாளர் நிலைமை

(திருவாளர். இ. வெண்ணிமலை பிள்ளையவர்கள் B. A, B. L.,)

(முன்தொடர்ச்சி)

சிவநெறி உய்யப்பிறந்த சிவஞான சுவாமிகள் சிறுவயதிலேயே சிவனடியார்களைக் கண்டால் வீட்டிற்கழைத்து விருந்தளிக்கும் தகைமைத்தாய் விளங்கினாரெனின் அது அன்னை என்ற மயிலம்மையாரின் திணித்த சிவனடியார் வழிபாட்டின் காரணமேயாம். நாடெங்கும் ஆஸ்திகம் குன்றி நாஸ்திகம் பேசுவதே நவீனமென நாட்டார் கொண்டு திரியும் காலத்தும் பிரஞ்சு தேசத்து அதிபதியும் நிலப்போரில் ஒப்புயர்வற்ற தீரனுமான நெப்போலியன் மட்டும் உயரிய நிலையில் ஐரோப்பா கண்டத்து அரசர்களனைவரையும் அடக்கி ஆண்டுகொண்டிருந்த பொழுதும், பின்னர் நாடிழந்து, நிதியிழந்து நமக்கினியுளதென என நினைக்கும்படி ஸெயின்ற் ஹெலினா தீவில் சிறைப்பட்டு எஞ்சிய நாட்களைத் தள்ளினபொழுதும் ஆண்டவன் அருட்டிறத்தை மறக்காது எக்காலத்தும் இறைவனை மனதில் துதித்து அவன் அருட்கடலில் ஈடுபட்டவனா யிருந்தானென்னின் அதற்கு அன்னையின் அம்மையிடமிருந்த அளவில் கடவுள் பக்தியே காரணம். நம அரசர் பெருமானின் தந்தை அரசியலை வெகு அழகாயும் அமைதியாயும் நடத்தி கொற்றவர் கூட்டத்தில் வெகுவாய் மதிக்கப்பட்டு மாற்றரசர்களையும் துணையரசர்களாக்கி நாட்டாரால் அமைதி சமைக்கும் எட்வர்ட் (Edward the Peacemaker) எனப் போற்றப்பட்டு அரசியலில் நிபுணராய் விளங்கினாரெனின் அதற்கு அன்னைக கண்ணுங்கருத்துமாய் வளர்த்த தாயார் விக்டோரியா மகாராணியாரிடமமைந்திருந்த அரசியலுக்கடுக்க தம சீரிய குணங்களே வெகுவாய்க் காரணம். மனக்குரங்கை ஆட்சிகொண்ட மகாத்மா காந்தியடிகளுங்கூட தான மதுமாமிச விலக்கு விரதத்திலிருந்து ஒரு சிறிதும் வழுவாததற்குக் காரணம் தன அன்னை யென்றன்றோ கூறுகின்றார்.

சரித்திரச சான்றுகளை 'ஒதுக்குவோம. நாடோடிய பழக கத்தில் காப்பிணிக்கு அவள் கேட்டதெல்லாங் கொடுக்கவேண்டும்: அவளிடம் கவலை, பயம முதலியவைகளுக் கிடங்கொடுகக லாகாது: அவள மனம எபபொழுதும குதூகலத்திலிருககுமபடியாய் நாம பாாத்துககொள்ளவேண்டும என நாம் சொலலுவது என? அது 'அவள் மனபபாஙகு அவளிடமிருககும் குழநதையையுந் தாககும எனற பயததிஞலனறே' ஆகவே அன்னை மனநிலையே அவள தம மக்களின் மனப்பானமைககு முககிய காரணம

இனி மனநிலையோ அறிவுபபோககை வெகுவாய் ஒட்டியது அறிவு விருததி மனநிலை விரிவுககு அடிபபடைக காரணம எனின அறிவு விருததியே மனநிலை விரிவென இஙகு கூறவிலலை சாதாரணமாய நாம அறிவெனககொள்ளும பொருள கலவியூட்டலால விருததி செய்யபபடாவிடில, மனநிலை விரிவேறபடவே முடியாது எனறு சொல்ல நான் துணியேன. உலகில, கல்வி யிலலாதிருநதும பரந்த மனபபாங்கு அமைநதிருப்பதை எததனையோ மககளிடம நாம காண்கின்றேம. ஆஞல அறிவு விசாலம பொதுவாய் மனநிலை விரிவுக்கு முககிய காரணம என்பது எல்லோரும ஒப்பத்தககதே.

எனவே வருஙகாலத்துத் தாயமார்களாகிய நங குலச் சிறுமிகள் பரநத மனத்தா யிருக்கல வேணடுமெனின அவாகளை கறறல் கேட்டலில் ஈடுபடச செய்பவேண்டும. அத்துடன நாம அவாகளுககுப பரந்த பொது அறிவு(General culture)பலவேறு வகைகளில் புகட்டவேணடும இப பொது அறிவு (General culture) இல்லாது கிணறறுத் தவளைகளாய நாட்டு வளபபமறியாது நம பெணகள் நமமுடன வாழநேரிடுவதாலதான நமககுள பெருமபானமையோாககு இலலற இனபம கறிககுதவா எட்டுச் சுரைககாயாய், முடிகிறது. அதனுறறுன நமமில அநேகருககு தக குடுமபமெனறலே கழுத்தைச் சுறறி வரும கண்டமாலையாக விருககிறது. உலகவாழககையின் உயாவும தாழவும இலவாழக்கையின இன்[illegible]தயும துன்பத்தையும பொறுததே. ஒரு கூட்

டத்தாரின் இல்வாழ்வு இவ்வாறிருந்தால் அவர்கள் உலகவாழ்க்கையில் எங்ஙனம் ஏற்றமடைய முடியும்?

ஒரு மரபினருக்கு இல்வாழ்வு இனிதமையுமேல் அவர் தம் மரபு உலகில் ஏற்றமடையுமென்பதற்கு ஐயமில்லை. இதற்குச் சான்று நம் நாடார் மக்களின் தற்கால நிலைமையே. அவர்கள் குல ஏற்றம் நம் நேரில் கண்டிருப்பது. அவ்வேற்றமும் சொற்ப காலத்திலேயே அடையப்பட்டதென்பதும் நாம் அறிவோம். இவ்வளவு கொஞ்சக் காலத்தில் அவர்கள் நானாவகைப்பட்ட வாழ்க்கைத் துறைகளிலும் தலைசிறந்து விளங்குவதின் காரணம் என்னை? அதிலும் அம்மக்களில் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த வகுப்பினர் வாழ்க்கையில் எவ்வளவு உயரிய நிலையடைந்துள்ளார்கள்? இதன் காரணந்தான் என்ன? அக்குலத்தாரின் குலாபிமானம் என்கின்றார்கள் நம்மவர்மலர். இல்லை முன்னேற்றமடைய வேண்டுமென்று அவர்களிடம் மூண்டிருக்கும் விடா முயற்சிதான் அடிப்படைக் காரணம் என அறைகின்றார் நம்மில் வேறு சிலர். இதுவுமில்லை. அவர்களனைவரும் கல்வியில் ஈடுபட்டதே அதற்குக் காரணம் என நம்மில் இன்னுஞ் சிலர் சொல்லுகின்றார்கள். இவர்களில் ஒவ்வொருவர் சொல்லுவதும் உண்மையே. குலாபிமானமும், விடாமுயற்சியும், கல்வியும் அவர்கள் ஏற்றத்துக்குக் காரணங்களதாம்; எனினும், அவர்கள் தங்குலப் பெண்களுக்குப் பரந்த பொது அறிவு (General culture) தான் அவர்கள் ஏற்றத்துக்கு முதலாய காரணம். இது நம்மனோரில் பெரும்பாலர்க்குப் புலப்படுவதில்லை. என்னை? வீட்டினபமில்லையேல் வாழ்க்கையும்பாவு நாட்டம் இல்வாழ்வானுக்கு எங்கிருந்தமையும்? நம் நாடார்குல ஆண்மக்களுக்கு மனமொத்த கிழத்தியர் கிடைத்தாலன்றோ அன்னார்க்கு உலக வாழ்க்கையில் உற்சாகமும் இறங்கின வாழ்க்கைத் துறைகளில் தலையாய விளக்கப் பரப்பும் ஏற்பட்டது. அவர்கள் ஏற்றமும் அவ்வுற்சாகத்தினாலும் பரப்பினாலுமன்றோ அமைந்தது. இவ்வுண்மையையறிந்து நாமும் நங்குலப் பெண்களுக்குப் பரந்தபொது அறிவு (General culture) இனியாவது சுணங்காமல் புகட்டவேண்டும்.

(தொடரும்)

# நன்னிலவள்ளி அல்லது தங்கையினடக்கம்

ஈழநாடு,—ஸ்ரீமதி செல்லம்மாள் அவர்கள்.
(முன் 4-வது பத்திரிகைத் தொடர்ச்சி)

முன கூடத்தில், திடீரென யாரும, அயலூராகாரர் அறிமுக் முள்ளவர்கள் வந்தால் படுத்துககொளளலாம. பழைய கால வழககப்படி வெளிததிண்ணையுமிருககிறது. மேலே சொலலிய பல பெரிய வீடுகளில் போதுமான வெளிச்சமும காற்றோட்ட மும வருதறகிடமினறி இருட்டறையாகவே யிருககிறது பகலிலே கூட தீபமின்றி போககு வரத்துச செய்ய முடியாது ஜன்னல்களை அதிகம வைததால் திருடாகள் சுலபமாகப புகுந்து விடுவார்க ளென்று கருதி முறகாலததில் மேல் கண்டபடி வீடுகளை கட்டுவது வழககமாம.

இருமபுப் பெட்டிகள் மலிந்தும், போலீஸ் பந்தோபஸ்துக கள் நிறைந்துமுள்ள இக்காலத்திலும பழைய பழககப்படியே பலர் வீடுகள் கட்டுகிறாகள். இது ஒரு புறமிருகக வெளித திணணை வைதது கட்டும வழக்கததை இபபோது பலர் அநாக ரீகமென்று கருதி (Compound) எலலைச சுவர்களை எழுப்பி வாசல வைத்து அமைதது கட்டிவருகிறாகள். நமது முன்னோ கள், கடுமையான வெயில் மழை காலஙகளில் வழிபபோககாகளை திடீரென ஒதுங்கி நிற்கவும ஆடு மாடுகள் ஓரத்தில நின்று கொள் வதறகேறற நிலமையிலும திண்ணையமைத் திருந்தார்களை இபபடி தஙக இடவசதி செய்திருபபது உபகாரமான செய்கையாகும. பலா தஙகிப போவதினால் அவ்வீட்டார் அறியாமலே அவாகளுக குப புண்ணியஞ்சாருமாம. வழிபபோககர்களில் அதிதி, பரதேசி, பக்தர்களை, ஞானிகளில யாரேனும ஒரு சமயம் தஙக நேர்ந்து சிறிது நேரம இருந்து போனால், பெரியோர்களை தங்கிய இடமா தலால அதன பயன நலல நிலததில் பட்ட சிறிய ஆலம வித்தா னது எபபடிப பெரிய நிழல கொடுககும மரமாகி நிறகுமோ அதுபோல அந்த வீட்டாருககும நனமைகளை மிகபபெருக வுண் டாகுமாம. வெளித் திண்ணையிருகக வேண்டிய அவசியத்தைப்

பற்றி ஒரு சிறு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது, வழிப்போக்காயுள்ள ஒரு சந்நியாசிக்கும் சொந்த வீட்டுக்காரரொருவருக்கு மிடையே நிகழ்ந்த வரலாறுகளாகும்.

ஒரு சமயம் சந்நியாசி யொருவர் வீதி வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது கனத்த மழை யொன்று வந்துவிட்டது வெளித் திண்ணையுள்ள இடமொன்று மில்லாததால் முன்னே சொல்லியபடி (Compound) எல்லைச் சுவர் கட்டியுள்ள ஒரு வீட்டுவாசலினுள்ளே நுழைந்தார். நுழைந்ததும், நாய் ஒன்று குலைத்துக்கொண்டு ஓடி வந்தது. நாயே சும்மாயிரு என்று ஒரு மந்திரத்தைச் சொல்லவும் நாயடங்கிப்போய் விட்டது உள் நுழைந்து பார்க்கும் பொழுது அங்கே உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது என்று ஒரு பலகையில் எழுதப்பட்டு ஒரு அறையின், வாசலோரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. இதைப் பார்த்துவிட்டு சந்நியாசி வாசலிலேயே நின்று கொண்டிருந்தார் காலும் வலியெடுத்துவிட்டது. காற்றின் வேகத்தாலடிக்கும் மழைத் தண்ணீரால நனைந்து கொண்டும் நிற்க முடியவில்லை. இந்தச் சமயத்தில் திடுமென அடித்த ஒரு பெருங்காற்றில் வாசல கதவு தற்செயலாய்த் திறந்துவிட்டது. சந்நியாசி பார்த்தார் உள்ளே யாரையுங் காணோம் நாலைந்து நாற்காலிகளும் ஒரு மேஜையும் இரண்டு பலகை கட்டில்களும் தான் கிடந்தன. நாமென்ன திருடவா போகிறோம் என்று நினைத்து அறையினுள் புகுந்து மூட்டையை தலைக்கு உயரத்துக்கு வைத்து காலை நீட்டி கட்டிலில் படுத்து அயர்ந்த நித்திரையாகிவிட்டார். பின் வீட்டின் சொந்தக்காரன் வந்து பார்த்து உரத்த சப்தத்துடன் சந்நியாசியை யெழுப்பி மிகுந்த கோபத்துடன் இதுவென்ன சத்திரமென்று நினைத்து தூங்குகிறீரா, உம்மை யார் காணும் உள்ளே யநுமதித்தது. மூட்டையைத் தூக்கிக்கொண்டு வெளியே போங்காணுமென்று துரத்தவும் சந்நியாசி மெதுவாய் எழுந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு என்னப்பா தூக்கத்திற் கிடையூறு செய்துவிட்டாய் அபாயமாயிருந்தாலன்றி தூங்குகிறவர்களை எழுப்பக்கூடாதென்று உனக்குத் தெரியாதா. இது சத்

திரமா யென்று கேட்டாயே எனக்கு இது சத்திரமாய்த்தான் தோணுகிறது. என்று சொல்லவும், உமக்கு மரியாதையாய்ப் பேசவுந் தெரியவில்லை உமக்கு கண்ணிருக்கிறதா இல்லையா வெளியே என்ன எழுதி தொங்கவிட்டிருக்கிற தென்பதைப் பார்த்திரா யில்லையா வென்று வீட்டுக்காரர் கேட்க, ஆமாம் பார்த்தேன், பார்த்துவிட்டு வெகு நேரமாக நின்று கொண்டிருந்தேன். உத்திரவு யாரிடம் வாங்குவதென்று தெரியாமல் விழித்தேன், அசரீரியாக உத்திரவு கிடைத்தது கதவும் திறந்தது உள்ளேவந்து படுத்துக்கொண்டேன் என்று கூறி முடிக்கவும் சொந்தக்காரர் முன்னிலும் கோபமாய் என்னை சத்திரத்திற்கும், வீட்டிற்கும், உமக்கு வித்தியாசந் தெரியவில்லையாகாணும் உளறுகிறீர். கஞ்சாவின் மயக்கமா, வெளியே போகிறீரா ஏதேனும் வேண்டுமா வென்று சினந்து பேசவும்; ஆறுவது சினம் என்னும் வாக்கியத்தை நீ எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும், நான் உன்னை மரியாதைக் குறைவாக ஒன்றும் பேசவுமில்லை, லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கும் பழக்கம் என்னிடம் கிடையாது, உபயோகிக்கும் மார்க்கமும் எனக்குத் தெரியாது, மழை விட்டவுடன் இந்தச் சத்திரத்தை விட்டுப் போய்விடுவேன்; நான் பதி, பசு, பாச, உண்மையறிந்த ஸைவசித்தாந்தி சமரச சுபாவமுடையவன்.

---

## "வேளாள மரபுதித்த ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள்" சரித்திரம்

(பா. இசக்கியப்பன் எழுதுவது)

எந்நாட்டிலும் நன்றுடனைப் பன்னூலாய்ந்த பாவலர்களாற் புகழப்படாநின்ற சோழமண்டலத்திலே, திருமறைக்காடு என்னும் தென்மொழிப் பெயரையுடைய வேதாரணியம் என்ற தெய்வத் திருப்பதியிலே, வேளாள மரபிலே சற்றேறக்குறைய இருநூற்று நாற்பது வருஷங்களுக்கு முன்னே அவதரித்த கேடிலியப்பிள்ளை என்பவர் ஒருவரிருந்தனர். இவர் கல்விகேள்விகளில்

முதிர்ந்து, சிவபக்தி அடியார்பக்தி முதலியவைகளிற் சிறந்து, வடமொழி வேதங்களால் பூசிக்கப்பெற்று அத்திருக்காப்பு நீக்கப் பெற்றதுமாய தன்னூர்ச் சிவபெருமான் திருக்கோயிற் றரும விசாரணைத் தொழிலில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அக்காலத்திலே, சோழநாட்டிலே திரிசிரபுரத்தை இராஜதானியாகக்கொண்டு அரசாண்ட விஜயாகுநாத சொக்கலிங்க நாயகர் என்பவர் கேடிலியப்பிள்ளையவர்களின் யோக்கியதை கணக்கு வல்லமை முதலியவற்றைப்பற்றிச் சில முதியோர்கள் சொல்லக்கேட்டு அவரை வரவழைத்துத் தன்னிடத்தில் ஒரு பெரிய சேவையில் அமர்த்திக்கொண்டனர். பிள்ளையவர்களும் தன்னரசன் சந்தோஷிக்குமாறு மிகவும் திறமையாகவே இராஜாங்க காரியத்தை நடாத்திக்கொண்டு வந்தனர். அப்போது, வேதாரணியத்திலே இருந்த தனது தமையனார் புத்திரப்பேறில்லாமல் வருந்துவதைக் கண்டு மனம்பொறாதவராய்த் தன்னுடைய அருமைப் புதல்வாகிய சிவசிதம்பரம்பிள்ளையை அவருக்கு ஸ்வீகாரபுத்திரனாய்க் கொடுத்துவிட்டுத் தனது மோக்ஷநிலைக்கோர் சற்புத்திரன் வேண்டுமென்னும் விருப்பமுடையவராய்த் திரிசிரா மலையினகண் வீற்றிருந்தருளும் தாயுமானேசுரரைத் தினந்தோறுந் தேவி சகிதம போற்றிவருவாராயினர். அந்நாளிலே, சிவபெருமானது பெருங்கருணைத் திருவருளால் பிள்ளையவர்கள் மனைவியார் திரு வயிற்றிலே கருப்பமுண்டாகிப் பத்துத் திங்களும் நிறம்பப்பெற்றுத் தனதூராகிய வேதாரணியத்திலே மிக்க சுபவோரையில் பெறுதற்கரிய ஓர் ஆண் மகவைப் பெற்றனர். தந்தையார் தனக்கு மகன் பிறந்த இடம் திருமறைக்காடாயினும் அம்மகவு விஷயமாக ஈட்டரும் பெருந்தவம் பல செய்து வந்த இடம் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தாயுமானேசுரர் திருவடியே ஆதலால், அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் திருப்பெயரையே பெயராகவைத்துச் சுக்கில பக்ஷத்துச் சந்திரன்போல நாளொரு மேனியாக வளர்த்துக்கொண்டு வந்தார்.

பிறகு இக் குழந்தை தக்க வயதிலே வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்று, நெடுங்கணக்கு முதலியவற்றைச் செவ்வனே

ஆராய்ந்துகொண்டு, நிகண்டுகற்று, இலக்கியம் இலக்கணம் தருக்கம் முதலிய கருவி நூல்களையும், வடமொழியின் கண்ணதாகிய இலக்கிய இலக்கணங்களையும், வேதாகமஸ்மிருதி புராண இதிகாச முதலியவற்றையும் நன்குகற்று மிகவும் வல்லவராயினர். அப்பால் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பிரபந்தமாலை, பெரிய புராணம் என்னும் சைவத் திருமுறைகளையும், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் சைவசித்தாந்த சாத்திரங்களையும, திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, என்னும் கௌமாரத் திருமுறைகளையும் பாராயணஞ்செய்து வருவாராயினர்.

(தொடரும்.)

---

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை.

(R. M. அண்ணாமலை செட்டியார்)

மாணவன்:— குருநாதா! தங்களிடம் சில உண்மைகள் தெரிய விரும்புகின்றேன். அவற்றை இப்போது கேட்கலாமா?

குரு:—மாணவ! நீ தெரிந்துகொள்ளவேண்டியது எதுவானாலும் தைரியமாகக் கேள். இப்போது பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

மா:—குல தெய்வ மென்று சொல்லப்படுவது யாரை?

குரு:—அங்கிங்கெனாதபடி எங்கும வியாபகமாகவும், இறப்புப் பிறப்புக்களிற் கட்டுப்படாததாகவு முள்ள முழு முதற் கடவுளாகிய பொன்னம்பலவாணரே நம்குலதெய்வமென் றறிவாயாக.

மா:—இதற்குப் பிரமாணம் யாது?

குரு:—

"அடியார்க் கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற் செல்வ வரம்பெறலாம் வையமே ழளந்த
நெடியோனும வேதனுங் காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்களவர்காணு மெங்கள் குலதெய்வமே"

என்று முற்றத் துறந்த முனிவராகிய பட்டினத்துப் பிள்ளையா ரருளியதே பிரமாணமென்க.

மா:—தாங்கள் பிரமாணமாகக் கூறியவரோ முற்றத்துறந்த முனிவர்! அவர் கூறியது எனக்குப் பொருத்தமாகத் தோன்ற வில்லையே.

குரு:—அறியாது கூறினாய் முற்றத்துறந்த முனிவரருளியவை யெல்லாம் நம்மனோர் முன்னேற்ற மடையும் பொருட்டுப் பாடப்பட்டவைகளாதலின் அவற்றை மறுத்தல் குற்றமாகும். அன்றியும் "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்தலகையா வைக்கப்படும்" இதன் பொருள்: உயர்ந்தோர் பலரும் உண்டென்று கூறிய பொருளை இல்லை யென்று தன் புல்லறிவால் கூறுபவன் மகனெனக் கருதப்படான்; இவ்வுலகத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படுவான் என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனா ரருளிச் செய்துள்ளா ராதலின் முனிவ ரருளியதை அப்படியே ஒப்புக்கொள்வாயாக.

மா:—தங்கள் சொற்படி பெரியா ரருளியதை அப்படியே ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் அதில் ஒரு சந்தேகமிருக்கின்றது: அதாவது எங்கள் முன்னோர்கள் மாடன், வீரன், இசக்கி, முதலானவைகளையே குலதெய்வமென்று வணங்கி வந்திருக்கின்றார்களே. அதற்குக் காரணம் தயவுசெய்து தெரிவித்தல் வேண்டும்.

குரு:—நீ கூறியபடி முன்னோர்கள் மேற்கூறிய சிறு தெய்வங்களையே வணங்கி வந்தன ரென்பதற்குப் பிரமாணமில்லை. அன்றியும் உலகப்பற்றை விட்டு எல்லாம்வல்ல இறைவன் திருவருட் பிரசாதம பெற்ற மெய்ஞ்ஞானிகளையே முன்னோர்களென்று

கொள்ளவேண்டுமேயன்றி உலகப்பற்றுடையாராயும் வயதினால் மாத்திரம் மேம்பட்டவராயுமுள்ள மாந்தரை முன்னோர்களென்று கொள்ளலாகாது. ஏனென்றால் அவர்கள் முக்குண வயத்தால் முறை பிறழ்ந்தறைவ ராதலால் அவரைப் பெரியா ரென்று கொண்டு மயங்காதே. நாம் அவர்களைப் பின்பற்றி நடக்கவும் கடமைப்பட்டவர்களல்ல.

மா:—ஐயனே! அப்படியானால் மாடன், வீரன். இசக்கி, முதலான தெய்வங்கள் வந்த காரணமென்ன?

குரு:—மேற்கூறிய சிறு தெய்வங்களெல்லாம் முற்பிறப்புக்களிற் செய்த தீவினைப் பயனாக முழு முதற் கடவுளாகிய பொன்னம்பல வாணரின் ஆணையின்படி பேய் வடிவங்கொண்டு இருளுலகத்தில் சுற்றித் திரிந்துகொண்டிருப்பனவாகும். ஆதலால் நீ அவற்றை வணங்கினாலும் முழு முதற் கடவுளரே பயன் கொடுப்பாரேயன்றி அவைகட்குச் சுதந்தரச் செயலொன்று மில்லையாதலாலே அவை நமக்குப் பலன் தாராதென் றறிவாயாக.

மா:—இதற்கென்ன சான்று?

குரு:—

"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படு மிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு
மாதலா னிவை யிலாதானறிந் தருள் செய்வ னன்றே"

மா:—இனித் தாங்கள் கூறியவாறு அச்சிறு தெய்வங்கட்குச் சுதந்தரச் செயலில்லை யானாலும் அவைகளை வணங்கி அவைகட்கு உயிர்ப்பலி கொடுக்கவில்லையானால் எங்கள் குடும்பங்கட்குத் துன்பத்தை விளைவிக்கின்றனவே இதற்கென் செய்வது!

குரு:—அச்சிறு தெய்வங்கட்குச் சுதந்தரச் செயலில்லை யாதலால் அவைகளால் உனக்காகிலும் உன் குடும்பத்திற்காகிலும் துன்பஞ்செய்ய முடியாது. ஆனால் துன்பம் வருவதற்குக் காரணம் என்னையோ வெனின், "நோயெல்லா நோய் செய்தார் மேலவா நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்." என்ற

பெரியார் திருவாக்குப்படி ஒருவன் முற்பிறப்புக்களிற் செய்து கொண்ட தீவினையின் பயனாக அச்சிறு தெய்வங்கள் மூலமாக வும் துன்பம் வரக்கூடும். அத்துன்பம நீக்கவேண்டுமானால் எல்லாம் வல்ல இறைவனாரிடம் முறையிட்டால் துன்ப நீங்கி இன்ப மடையலாம். அதற்குப் பதிலாக அச்சிறு தெய்வங்களிடம் முறையிடுதல் எதுபோல இருக்கிறதென்றால் திருடர்களாற் றுன்பம் வருமானால் அரசனிடம் முறையிட்டால் அவர்களாற் றுன்பம் வாராமல் அரசனே காப்பான், அதற்குப் பதிலாக அரச னாணையின்படி இருட்டறையில் அடைபட்டிருக்கும் கைதிகளிடம் சென்று ஏ! கைதிகளே, உங்கட்கு வேண்டிய பொருள்களில் எங்களா லியன்றதைத் தருகின்றோம்; அவற்றை யேற்றுக்கொண்டு இனி எங்கட்கு எவ்விதத் துன்பமும் விளைத்தலாகாது. என்று முறையிட்டுக்கொள்வதையே ஒத்திருக்கின்றது. நீங்கள் இறைவன்பாற் சென்று முறையிடாமல் சிறு தெய்வங்களிடஞ்சென்று நீ கேட்கிற உயிர்ப்பலியைத் தந்து விடுகின்றோம்; இனிமே லெவ்விதத் துன்பமும விளைக்கலாகாது என்று முறையிடுதலானது. இதனால் அவற்றை வணங்கவேண்டியது மில்லை; அவைகட்கு உயிர்ப்பலி கொடுக்க வேண்டியது மில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டேன்.

மா:—தாங்கள் கூறியதை மனமுவந்து ஒப்புக்கொண்டேன் ஆனால் உயிர்ப்பலி விஷயமாக மாத்திரம் சந்தேக மிருப்பதால் அதை மிகவும் விரிவாக விளக்கியருளக் கேட்டுக்கொள்கின்றேன்.

(தொடரும்)

---

நற்செய்தி

நமது சந்தா நேயருமம பிரபல வியாபாரியும் நமது நண்பருமாகிய கல்கத்தா, திருவாளர் S. N. V. நடராஜபிள்ளையவர்கள் நமது வேளாளனுக்குச் சந்தாதார்கள் பலர் சேர்த்துத் தருவதாகவும தகுந்த நன்கொடை தருவதாகவும் மற்றும் வேண்டும் உதவிகள் பல செல்வதாகவும், வாக்களித்துள்ளார்கள். ஆண்டிற் சிறியரேயாயினும் அறிவுமிக்க இவ் அன்பரின் சமுகப்பற்றும சமயப்பற்றும் அறிவுடையாரனைவரும் அகமகிழ்தற்குரியது.

## உள்ளூர் சந்தா நேயர்களுக்கு

ஐந்து மாதங்களாகியும் இன்னும் அனேகர் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தவில்லை. ஆதலால் இனியேனுஞ் சுணங்காமல் சந்தாவைக் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். நாள் ஒன்றுக்கு ஒரு பைசாவாகிய மிகச் சொற்பத் தொகையை இரண்டு ரூபாயை கொடுக்க மனமில்லாமல் இரண்டொரு கனவான்கள் பத்திரிகை வேண்டாமென்றும் வேறு சில காரணங்களும் கூறுகின்றனராம். இனியேனும் அக் கனவான்கள் நம் சமூகநலன் ஒன்றையே கருதி மிக மனமகிழ்ச்சியுடன் சந்தாத் தொகையைக் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## முன்மாதத் தலையங்கம்

சென்ற மாதத் தலையங்கத்தில் திருவாளர் பொ. திருகூட சுந்தரம் பிள்ளையவர்கள் வேளாளன் எதற்கு? என்ற வியாசத்தை வேளாளனில் வெளியிட முயன்றார்; என்றதைத் தாமாக முயற்சிக்கவில்லையென்றும் நாம் வியாசங் கேட்டபிறகே முயற்சித்ததாகவும் பிள்ளையவர்கள் அறிவிக்கிறார். நாம் பிள்ளையவர்களை விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கதர் சம்மந்தமான வியாசங்கள் எழுதியனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதே தவிர இவ்வியாசம் எழுதியனுப்பக் கேட்டதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## சூலவை நேயர்களுக்கு

நேயர்களே! நமது குலமக்கள் மிகுதியும் வாழுமூர் சூலவையேயாகும். நமது ஜில்லாவில் இப்பெருமை தங்களுக்கே உரியது. சமூக முன்னேற்றத்திற்கான தொண்டில் ஆர்வங்கொண்டு "வேளாளன்" பத்திரிகையை ஆரம்பித்த நாமும தங்கள ஆதரவுபெறவேண்டித் தங்கள் விலாசங்களை மிகச் சிரமத்துடன் சேகரித்துத் தங்களுக்கு நமது வேளாளனை அனுப்பி வருகின்றோம். தாங்களும் பெற்றுவருகின்றீர்கள். ஆனால் தங்கள் சந்தாத் தொகை இன்னும் பலர் அனுப்பியுதவவில்லையாதலால் அனுப்பியுதவாத அனைவரும் அன்புடன் இது பார்த்தவுடன் அனுப்பியாதரிக்க வேண்டுகிறேன். மறு இதழ் வெளிவருவதற்குள் மணியாடர் மூலம் அனுப்பாத அன்பர்களுக்கு மறு இதழ் அதாவது ஆறுவது இதழ் முதல் வி. பி. யில் அனுப்பப்படும் என்பதை இதன் மூலம அன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.